DC Pudukottai

## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் – 2010–2011–ஆம் ஆண்டு – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு 25 விடுதிகளும், இஸ்லாமிய மாணவியருக்கென 1 விடுதியும் ஆக மொத்தம் 26 புதிய விடுதிகள் துவங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1 (2))துறை</u>

**அரசாணை (நிலை) எண். 62** **நாள்: 05.08.2010.**

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். பி4/3065/2010, நாள். 14.7.2010.

-----

**ஆணை:**

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் இஸ்லாமிய சிறுபான்மையின மாணவ/மாணவியரின் நலனுக்காக மொத்தம் 1212 விடுதிகள் இயங்கி வருகின்றன. 2010–11–ஆம் ஆண்டில் இத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியருக்கு புதிதாக 25 விடுதிகளும், இஸ்லாமிய மாணவியருக்கு ஒரு விடுதியும், ஆக மொத்தம் 26 விடுதிகள் துவங்க வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் 26 புதிய விடுதிகளை துவங்கக் கோரி பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேற்கூறிய கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

(i) 2010–2011–ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பு மாணவ/ மாணவியருக்கு 25 விடுதிகளும், இஸ்லாமிய மாணவியருக்கென 1 விடுதியும், ஆக மொத்தம் 26 புதிய விடுதிகளை இணைப்பில் கண்டுள்ளவாறு துவங்கிட அரசு ஆணையிடுகிறது.

(ii) 2010–2011–ஆம் ஆண்டு துவங்கப்படும் 26 புதிய விடுதிகளில், 23 பள்ளி விடுதிகளாகவும், 3 கல்லூரி விடுதிகளாகவும் இயங்கும். 23 பள்ளி விடுதிகளில் 11 விடுதிகள் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளாகவும், 10 விடுதிகள்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளாகவும், 1 விடுதி இஸ்லாமிய மாணவியர் விடுதியாகவும், 1 விடுதி நரிக்குறவர் பள்ளி மாணவர்களுக்கென சிறப்பினமாக 100 மாணவர் எண்ணிக்கையுடனும், மற்ற விடுதிகள் ஒவ்வொன்றும் 50 மாணவ/மாணவியர் எண்ணிக்கையுடனும் இயங்கும்.

(iii) கல்லூரி விடுதிகளைப் பொறுத்தமட்டில், 3 கல்லூரி விடுதிகளில் 1 விடுதி பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியாகவும், 2 விடுதிகள் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளாகவும் இயங்கும்.

(iv) இந்த 26 புதிய விடுதிகளையும் ஆகஸ்ட் 2010 முதல் வாடகைக் கட்டடங்களில் துவங்கிட அனுமதிக்கப்படுகிறது.

(v) நரிக்குறவர் மாணவர் விடுதியைத் தவிர, பிற விடுதிகள் ஒவ்வொன்றிலும் 50 மாணவ/மாணவியர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. புதிதாக துவங்கப்படும் 26 மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பணியிடங்களின் விவரம் | ஊதிய விகிதம் | 26 விடுதிகளுக்கான பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர்/ காப்பாளினி | ரூ.9300–34800+ 4400 (தர ஊதியம்) | 26 |
| 2. | சமையலர் | ரூ.4800–10,000+ 1300 (தர ஊதியம்) | 27 |
| 3. | காவலர்/ஏவலர் | ரூ.4800–10,000+ 1300 (தர ஊதியம்) | 26 |

மேற்காண் பணியிடங்களில் நரிக்குறவர் பள்ளி மாணவர் விடுதியைத் தவிர ஒவ்வொரு விடுதிக்கும், ஒரு பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர்/ காப்பாளினி, ஒரு சமையலர், ஒரு காவலர்/ஏவலர் அனுமதிக்கப்படுகிறது. திருச்சி மாவட்டம், தேவராயநேரியில் அமையவிருக்கும் 100 மாணவர் கொண்ட நரிக்குறவர் பள்ளி மாணவர் விடுதிக்கு மட்டும் ஒரு பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர், இரு சமையலர்கள், ஒரு காவலர்/ஏவலர் பணியிடங்கள் அனுமதிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 2–ல் புதிதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 26 விடுதிகளுக்கு, 2010–11–ஆம் ஆண்டில் தொடர் செலவினமாக ரூ.1,70,74,240/–மும் (ரூபாய் ஒரு கோடியே எழுபது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ.46,40,950/–மும் (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து நாற்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) ஆக மொத்தம் ரூ.2,17,15,190/– (ரூபாய் இரண்டு கோடியே

பதினேழு இலட்சத்து பதினைந்தாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்)—க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4—ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) <u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்: (ரூ. 98,46,490/—)</u>

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – JA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(து.தொ.கு. 2225-03-277-JA-0106) | 47,22,720 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(து.தொ.கு. 2225-03-277-JA-0553) | -- | 3,60,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(து.தொ.கு. 2225-03-277-JA-0615) | 5,76,000 | -- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(து.தொ.கு. 2225-03-277-JA-2408) | -- | 12,83,600 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(து.தொ.கு. 2225-03-277-JA-3425) | -- | 3,70,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(து.தொ.கு. 2225-03-277-JA-6799) | 22,88,000 | -- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் சிலேட்டுகள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவு<br>(து.தொ.கு. 2225-03-277-JA-6806) | -- | 96,250 |
| 99 பல்வகை<br>(து.தொ.கு. 2225-03-277-JA-9901) | 1,49,920 | -- |
| | 77,36,640 | 21,09,850 |
| மொத்தம் | 98,46,490 | |

**(ii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்: ( ரூ.1,10,54,130/–)</u>**

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – KA – மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(த.தொ.கு. 2225-03-277-KA-0105) | 51,99,800 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(த.தொ.கு. 2225-03-277-KA-0552) | -- | 3,90,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(த.தொ.கு. 2225-03-277-KA-0614) | 6,24,000 | -- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(த.தொ.கு. 2225-03-277-KA-2407) | -- | 14,52,450 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(த.தொ.கு. 2225-03-277-KA-3424) | -- | 4,10,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(த.தொ.கு. 2225-03-277-KA-6798) | 26,96,800 | -- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு<br>(த.தொ.கு. 2225-03-277-KA-6805) | -- | 1,05,000 |
| 99 பல்வகை<br>(த.தொ.கு. 2225-03-277-KA-9900) | 1,76,080 | -- |
| | **86,96,680** | **23,57,450** |
| **மொத்தம்** | **1,10,54,130** | |

**(iii) சிறுபான்மையினர் நல விடுதிகள்:(ரூ.8,14,570)**

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(து.தொ.கு. 2225-03-277-LA-0104) | 3,93,560 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(து.தொ.கு. 2225-03-277-LA-0551) | -- | 30,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(து.தொ.கு. 2225-03-277-LA-0613) | 48,000 | -- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(து.தொ.கு. 2225-03-277-LA-2406) | -- | 1,04,900 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(து.தொ.கு. 2225-03-277-LA-3423) | -- | 30,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(து.தொ.கு. 2225-03-277-LA-6797) | 1,87,200 | -- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு<br>(து.தொ.கு. 2225-03-277-LA-6804) | -- | 8,750 |
| 99 பல்வகை<br>(து.தொ.கு. 2225-03-277-LA-9909) | 12,160 | -- |
| | 6,40,920 | 1,73,650 |
| **மொத்தம்** | **8,14,570** | |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. தொடரா செலவினத்தில் ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கு கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிக்கப்படுகிறது.

| வ. எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை ரூ. |
|---|---|---|
| (i) | எரிவாயு இணைப்பு | 30,000 |
| (ii) | நூலக வசதி | 30,000 |
| (iii) | பாத்திரங்கள்<br>நரிக்குறவர் பள்ளி மாணவர் விடுதிக்கு மட்டும் | 30,000<br>50,000 |
| (iv) | மரச்சாமான்கள் | 30,000 |
| (v) | அரவை இயந்திரம்<br>நரிக்குறவர் பள்ளி மாணவர் விடுதிக்கு மட்டும் | 8,000<br>16,000 |
| (vi) | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| (vii) | விளையாட்டு கருவிகள் | 5,000 |
| (viii) | முதலுதவி பெட்டி | 650 |
| (ix) | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 4,000 |
| (x) | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 |
| (xi) | பாய் (50 எண்ணிக்கை x ரூ.48) | 2,400 |
| (xii) | பெட்ஷீட் (50 எண்ணிக்கை x ரூ.100) | 5,000 |
| (xiii) | தட்டு மற்றும் டம்ளர் (50 எண்ணிக்கை x ரூ.75) | 3750 |
| (xiv) | அகராதி மற்றும் அட்லஸ் (50 எண்ணிக்கை x ரூ.175) (பள்ளி விடுதிகளுக்கு மட்டும்) | 8750 |

நரிக்குறவர் பள்ளி விடுதிக்கு மட்டும் இனம் எண். **xi** முதல் **xiv** வரை 100 மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்டு செலவினம் கணக்கிடப்பட வேண்டும்.

8. மேலே பத்தி 6–ல் கல்லூரி விடுதி மற்றும் பள்ளி விடுதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட இனங்கள் தவிர ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டவாறு கூடுதல் இனங்களுக்கு செலவினம் அனுமதிக்கப்படுகிறது.

(i) இன்வர்ட்டர் ரூ. 15,000/–
(ii) பாடக்குறிப்புப் புத்தகம் ரூ. 10,000/–
(iii) புத்தக அலமாரி ரூ. 9,800/–

9. இது ஒரு "புதுப்பணி" (New instrument of service) குறித்த செலவினமாகும். உரிய காலத்தில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு – செலவு–I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் நிதி (வரவு – செலவு I)

துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 2010–11–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை நிதி (வரவு/செலவு I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி மேற்கூறிய மூன்று ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. இணைப்பில் கண்டுள்ள 26 புதிய விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா. எண். 15/JS(BVR)/2010, நாள். 5.8.2010 மற்றும் அ.சா.எண். 44670/CMPC/2010, நாள். 5.8.2010 பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 635 (அறுநூற்று முப்பத்து ஐந்து).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

துு.நா. இராமநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை – 5
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை-5.
ஆணையர் சிறுபான்மையினர் நலம், சென்னை–2.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18 /(பெயரில்)
மாநில கணக்காயர் (துணிக்கை – 1), சென்னை18/(பெயரில்)
மாநில கணக்காயர் (துணிக்கை–2), சென்னை – 18/(பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 5/மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்

**நகல் :**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9.
அமைச்சர் (பிந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.
நிதித்(பி.மிபி/வ.செ.பொ.I/வ.செ.பொ.II/CMPC) துறை, சென்னை– 9.
பி.மி.பி (ம) சிந (பிந3 /சிநஆபி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/8/10

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

### 2010–11–ஆம் ஆண்டில் 26 புதிய விடுதிகள் துவங்கப்பட வேண்டிய விவரம்

| வ. எண். | மாவட்டம் | விடுதிகள் துவங்கப்பட வேண்டிய இடம் | மாணவ/ மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | **பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்** | |
| 1. | திருவள்ளூர் | பள்ளி மாணவர் விடுதி, கே.ஜி. கண்டிகை. | 50 |
| 2. | | பள்ளி மாணவியர் விடுதி, திருவாலங்காடு. | 50 |
| 3. | புதுக்கோட்டை | பள்ளி மாணவர் விடுதி, அத்தாணி. | 50 |
| 4. | தூத்துக்குடி | பள்ளி மாணவர் விடுதி, கே. தங்கம்மாள்புரம். | 50 |
| 5. | திருச்சி | பள்ளி மாணவர் விடுதி, காணக்கிளியநல்லூர். | 50 |
| 6. | விருதுநகர் | பள்ளி மாணவர் விடுதி, காரியாப்பட்டி. | 50 |
| 7. | நாமக்கல் | பள்ளி மாணவியர் விடுதி, வேலங்கவுண்டம்பட்டி. | 50 |
| 8. | இராமநாதபுரம் | பள்ளி மாணவியர் விடுதி, தொண்டி. | 50 |
| 9. | | பள்ளி மாணவியர் விடுதி, செல்வநாயகபுரம். | 50 |
| 10. | காஞ்சிபுரம் | பள்ளி மாணவியர் விடுதி, குன்றத்தூர். | 50 |
| 11. | நீலகிரி | கல்லூரி மாணவியர் விடுதி, கூடலூர். | 50 |
| 12. | நாகப்பட்டினம் | பள்ளி மாணவியர் விடுதி, தகட்டூர். | 50 |
| | | **மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்** | |
| 13. | திருவண்ணாமலை | பள்ளி மாணவர் விடுதி, கரிகலாம்பாடி. | 50 |
| 14. | கடலூர் | பள்ளி மாணவர் விடுதி, ஒறையூர். | 50 |
| 15. | | பள்ளி மாணவர் விடுதி, கிருஷ்ணாபுரம். | 50 |
| 16. | தருமபுரி | பள்ளி மாணவர் விடுதி, பி. அக்ரஹாரம். | 50 |
| 17. | | பள்ளி மாணவியர் விடுதி, இருமத்தூர். | 50 |
| 18. | கிருஷ்ணகிரி | பள்ளி மாணவர் விடுதி, வெண்ணம்பள்ளி. | 50 |
| 19. | சேலம் | கல்லூரி மாணவர் விடுதி, மேட்டூர். | 50 |
| 20. | | பள்ளி மாணவியர் விடுதி, வலசையூர், (அயோத்தியாப்பட்டணம்). | 50 |
| 21. | | பள்ளி மாணவர் விடுதி, கூடமலை. | 50 |
| 22. | திருச்சி | நரிக்குறவர் பள்ளி மாணவர் விடுதி, தேவராயநேரி. | 100 |
| 23. | கரூர் | பள்ளி மாணவியர் விடுதி, காணியாளம்பட்டி. | 50 |
| 24. | தஞ்சாவூர் | கல்லூரி மாணவியர் விடுதி, மன்னர் சரபோஜி அரசுக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர். | 50 |
| 25. | திண்டுக்கல் | பள்ளி மாணவியர் விடுதி, பெரியகோட்டை | 50 |
| | | **இஸ்லாமிய சிறுபான்மையினர் நல மாணவியர் விடுதி** | |
| 26. | திருநெல்வேலி | இஸ்லாமிய சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதி, கடையநல்லூர். | 50 |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

5/8/10